திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் படகுகள் இப்போது போவதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை என்று சொன்னார்கள். சிலநேரங்களில் அங்கே படகுகள் சென்று கொண்டிருக்கின்றன. அதற்கு துடுப்புகளை உபயோகப்படுத்துவதன் காரணமாக கூவம் நதியினுடைய துர்நாற்றம் அதிகமாகி இருக்கிறது. ஆகவே, நிரந்தரமாக அந்த இடத்தில் படகுகள் செல்லாமல் இருப்பதற்கு அரசு தடை விதிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி கவனிக்கப்படும்.

வளசரவாக்கம் பேரூராட்சிப் பகுதிக்கான நிரந்தரக் குடிநீர்த் திட்டம்.

274—(*வினா எண். 19277)—திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம் வளசரவாக்கம் பேரூராட்சிக்கு நிரந்தரக் குடிநீர்த் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) : சென்னை நகருக்கு கிருஷ்ணா நதி நீர் கொணரும் திட்டத்தில் வளசரவாக்கம் பேரூராட்சியும் இடம் பெறுகிறது.

குடிநீர்த் திட்டங்களுக்காக ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து பெறப்பட்ட கடன் தொகை.

275—(*வினா எண். 19834)—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் மூலம் குடிநீர்த் திட்டம் செயல்பட எவ்வளவு தொகை 1983 மார்ச் முடிய கடனாக வழங்கப்பட்டுள்ளது?

1984 மார்ச் 12]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: 1969–70 முதல் மார்ச் 1983 வரை, ரூ. 5778.46 இலட்சம் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றிட ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து கடனாகப் பெறப்பட்டுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலும் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் மூலம் கடன் பெற்று நகராட்சிகளிலோ அல்லது பேரூராட்சி மன்றங்களிலோதான் இப்படிப்பட்ட குடிநீர் திட்டங்களை செயல்படுத்துகிற முறை இப்போது நடைமுறையில் இருக்கிறதாக நான் அறிகிறேன். கிராமபஞ்சாயத்துகளில் தண்ணீர் கிடைக்காத கிராமங்களாக இருந்தால் 4,5 பஞ்சாயத்துக்களை ஒன்று சேர்த்து காப்பீட்டு கழகத்திலிருந்து கடன் பெற்று தொலை தூரத்திலிருந்து வருகிற தண்ணீரை கொடுக்கிற அளவில் இந்தத் திட்டத்தை செயல்படுத்த அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூரல் வாட்டர் சப்ளை பொறுத்த வரையில் அதைப் பூராவும் அரசே தன்னுடையச் சொந்தப் பணத்திலிருந்து செலவு செய்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

20 அம்சத் திட்டத்தின் கீழ் கிராமங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம்.

276—(* வினா எண். 20796) திரு. சி. கணேசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1983–84ல் 20 அம்சத் திட்டத்தின் கீழ் கிராமங்களுக்குப் 'பாதுக்காக்கப்பட்ட குடிநீர்' வழங்க தமிழக அரசுக்கு மைய அரசு உதவி செய்துள்ளதா?

(ஆ) ஆம், எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) 1983–84 ஆம் ஆண்டில் விரைவுபடுத்தப்பட்ட குடிநீர்த் திட்டத்திற்கென ரூ. 6.94 கோடி மத்திய அரசு வழங்கியுள்ளது. இது தவிர 1983–84ல் ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் ரூ. 4 கோடி வழங்கியுள்ளது.